# பேராலய ஒலி

பங்கு மாத இதழ்





ஒலி – 06 பிப்ரவரி – 2021 அலை – 2



# பங்குப் பணியாளர்களிடமிருந்து...

**அன்புக்குரியவர்களே,**

வணக்கமும் வாழ்த்தும். ஒரு புதிய ஆண்டைத் தொடங்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம். புத்தாண்டுத் தொடக்க நாளில் நம்மில் நிறைந்திருந்த நல்ல எண்ணங்களும், நம்பிக்கைகளும் நம்மில் தொடர்ந்து இருக்கட்டும்.

தைப்பொங்கல் திருநாளையும் தமிழர் திருநாளாக தமிழ்ப் புத்தாண்டு தினமாக கொண்டாடி மகிழ்ந்தோம். நம் பேராலயத்திலும் தொடர் மழையின் நடுவிலும் பொங்கல் விழாவைச் சிறப்பித்தோம். அன்பியப் பொங்கல் வைத்து மகிழ்ந்த சகோதர சகோதரிகளுக்கும் ஆடிப் பாடி மகிழ்ந்த இளவல்களுக்கும் குழந்தைகளுக்கும் வாழ்த்துகள், நன்றிகள்.

நம் நாட்டின் குடியரசு திருநாளில் ஓர் உழவரைக் கொண்டு கொடியேற்றி மகிழ்ந்தோம். நாட்டுப்பற்று கொண்டிருப்போம். நம் நாடு தவறானப் பாதையில் செல்லும் வேளையில் சனநாயக நெறிமுறைகளைக் காக்கப் போராடுவதும் நம் கடமை என்றுணர்வோம். எல்லாரும் எல்லா நலமும், வளமும் பெற்று சம உரிமைகள் பெற்று வாழ நினைப்போம்.

இம்மாதம் 2-ம் தேதி இயேசு ஆண்டவர் கோயிலில் அர்ப்பணிக்கப்பட்ட நாளை நம் பங்கிலுள்ள துறவோர் நாளாக கொண்டாடினோம். திருப்பலி கொண்டாட்டத்திலும் அன்புறவு விருந்திலும் பங்குப்பெற்ற அனைத்து துறவியருக்கும் மனம் நிறைந்த நன்றிகள். துறவியர் திரு அவைக்கு கடவுள் கொடுத்த அருள்வரங்கள்; திரு அவையின் மிகப்பெரும் சொத்து அவர்கள். திரு அவையின் நற்செய்திப் பணியை தாங்கள் ஆற்றும் கல்விப் பணி, மருத்துவப் பணி, பிற அறப் பணிகள் வாயிலாக தொடர்ந்து செய்து வருபவர்கள் அவர்களே. அவர்களுக்கு நன்றியறிந்திருப்போம்; அவர்களது பணியில் நாம் துணையிருப்போம்; அவர்களுக்காக தொடர்ந்து இறைவனிடம் மன்றாடுவோம்.

வரும் 17-ம் தேதி திருநீற்றுப் புதனோடு தவக்காலத்தில் அடியெடுத்து வைக்கிறோம். கடவுளின் அருள்பெருக்கின் காலம் இது. அவரது பேரன்பிலும் பேரிரக்கத்திலும் நம்பிக்கை கொண்டு அவரை நோக்கி திரும்பி வருவோம்; திருந்தி வருவோம். அதிக நேரம் ஒதுக்கி செபிப்போம். அடிக்கடி திருப்பலியில் பங்கெடுப்போம். உண்ணா நோன்பிருந்து நம்மைப் பக்குவப்படுத்துவோம். ஏழைகளுக்கு உதவுவோம். நம் வாழ்வை நல்வழிப்படுத்துவோம். தவறான, பிழையான பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலைப் பெறுவோம்.

## ஓர் அன்பு வேண்டுகோள்!

நம் பங்கில் உள்ள 67 வயதான, ஏழை நோயாளிகளுக்கு மாதம் ரூபாய் 500/- உதவித் தொகையாக மரியாயின் சேனையினர் மூலமாக வீடு தேடி கொடுத்து வருகிறோம். தாராள உள்ளம் கொண்ட நம் பங்கிலுள்ள சில குடும்பங்களின் மாதாந்திர நன்கொடையாலும், பங்கின் நிதி மூலமும் இப்பணியைச் செய்கிறோம். இன்னும் நிறைய பேருக்கு உதவ வேண்டியிருக்கிறது. குறைந்தது மொத்தமாக நூறு பேருக்காவது மாதந்தோறும் கொடுக்க விரும்புகிறோம். உங்களால் இயன்றவாறு ஒருவருக்கோ, கூடுதலாக பலருக்கோ ரூபாய் 500/- வீதம் கொடுக்க முன்வருமாறு அன்புடன் அழைக்கிறோம். சின்னஞ்சிறிய தன் சகோதர சகோதரிகளுக்கு நாம் செய்வதை தனக்கே செய்ததாக கருதுபவர் நம் கடவுள்.

ஆசியுடன்,

**அருள்திரு. த. சகாயராஜ்,** பங்குப்பணியாளர்

**அருள்திரு. சு. மரியசூசை,** உதவிப்பங்குப்பணியாளர்

## ஜனவரி மாதத்தில் நிகழ்ந்தவை

* 1ஆம் தேதி காலை 8.30 மணி திருப்பலியை நம் மறைமாவட்டத்தில் பொன்விழா காணும் அருள்தந்தை. சின்னப்பன் அவர்கள் தலைமையேற்று சிறப்பித்தார். அத்திருப்பலியின் இறுதியில் தந்தை அவர்களுக்கு கேக் வெட்டி வாழ்த்தும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

* 14ஆம் தேதி மாலை 6.15 மணிக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் விழா சிறப்புத் திருப்பலியை அருள்தந்தை. பிலிப் சுதாகர் அவர்கள் தலைமையேற்று சிறப்பித்து, அழகிய மறையுரையும் வழங்கினார். திருப்பலிக்குப் பின்பு அன்பியங்கள், இளையோர் இயக்கம், பீடப் பணியாளர்கள் மற்றும் மறைக்கல்வி மாணாக்கர்கள் வழங்கிய கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. வருகை புரிந்த அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

* 17ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு பங்கின் பல்வேறு அன்பியங்கள் பங்கு பெற்ற அன்பியப் பொங்கலிடும் நிகழ்வு இனிதே நடைபெற்றது.

* 26ஆம் தேதி நம் இந்தியத் திருநாட்டின் குடியரசு தினவிழாவை முன்னிட்டு காலைத் திருப்பலிக்குப் பின்பு பேராலய வளாகத்தில் இந்திய தேசியக் கொடியானது ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

## பிப்ரவரி மாதத்தில் நிகழவிருப்பவை

* 2ஆம் தேதி இயேசுவை கோயிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்த நாள். அன்றைய நாளை நம் பங்கில் துறவோர் தினமாக சிறப்பிக்கிறோம். எனவே அன்று மாலை 6.15 மணி திருப்பலியானது நம் பங்கில் பணிபுரியும் அனைத்து துறவற சபையினரால் சிறப்பிக்கப்படும்.

* 7ஆம் தேதி நம் பங்கில் அன்பிய ஆண்டு விழாவானது சிறப்பிக்கப்படுகிறது. அன்று மாலை 4 மணிக்கு கருத்தமர்வுக் கூட்டமும் அதன்பின் கலை நிகழ்வுகளும் நடைபெறும். மாலை 6.15 மணிக்கு சிறப்புத் திருப்பலி நடைபெறும்.

* 11ஆம் தேதி புனித லூர்து அன்னையின் திருவிழாவை முன்னிட்டு அன்று மாலை 6 மணிக்கு அன்னையின் சிறு தேர்ப்பவனியும், செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.

* 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் நம் பங்கிலிருந்து தூத்துக்குடி, குழித்துறை மற்றும் கோட்டாறு ஆகிய மறைமாவட்டங்களிலுள்ள சில ஆலயங்களுக்கு திருப்பயணமாக செல்கிறோம்.
* 17ஆம் தேதி திருநீற்றுப்புதன். எனவே அன்று காலை 5 மணி மற்றும் 6.30 மணிக்கும், மாலை 6.15 மணிக்கும் திருப்பலி நடைபெறும்.
* தவக்கால வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.15 மணிக்கு திருப்பலியும், அதனைத் தொடர்ந்து சிலுவைப்பாதையும் நடைபெறும்.

## திருச்சிலுவைப்பாதையை வழிநடத்தும் அன்பியங்கள்

| தேதி | அன்பியங்கள் | நிலை |
|---|---|---|
| 19.02.21 | புனித அன்னை தெரசா அன்பியம் | 1, 2 |
| | புனித அருளானந்தர் அன்பியம் | 3, 4 |
| | புனித சிறுமலர் அன்பியம் | 5, 6 |
| | புனித செசிலியா அன்பியம் | 7, 8 |
| | அடைக்கலமாதா அன்பியம் (கூனிபஜார்) | 9, 10 |
| | FMM அருள்சகோதரிகள் | 11, 12 |
| | மரியகம் அருள்சகோதரிகள் | 13, 14 |
| 26.02.21 | திருஇருதய ஆண்டவர் அன்பியம் | 1, 2 |
| | புனித ஆசீர்வாதப்பர் அன்பியம் | 3, 4 |
| | புனித வளன் அன்பியம் | 5, 6 |
| | புனித அந்தோணியார் அன்பியம் (மார்சிங்பேட்டை) | 7, 8 |
| | லூர்தன்னை அன்பியம் | 9, 10 |
| | புனித வின்சென்ட் தே பவுல் சபையினர் | 11, 12 |
| | இமாக்குலேட் அருள்சகோதரிகள் | 13, 14 |
| 05.03.21 | புனித மத்தேயு கபிரியேல் அன்பியம் | 1, 2 |
| | சகாயமாதா அன்பியம் | 3, 4 |
| | புனித ஆரோக்கிய அன்னை அன்பியம் | 5, 6 |

| | | |
|---|---|---|
| | புனித பவுல் அன்பியம் | 7, 8 |
| | குழந்தை இயேசு அன்பியம் | 9, 10 |
| | மரியாயின் சேனையாளர்கள் | 11, 12 |
| | திருச்சிலுவை அருள்சகோதரிகள் | 13, 14 |
| 12.03.21 | புனித சந்தியாகப்பர் அன்பியம் | 1, 2 |
| | புனித பிரான்சிஸ் சேவியர் அன்பியம் | 3, 4 |
| | புனித மரியம் தெரசா அன்பியம் | 5, 6 |
| | புனித செபஸ்தியார் அன்பியம் (கெம்ஸ்டவுன்) | 7, 8 |
| | புனித அடைக்கலமாதா அன்பியம் (மரக்கடை) | 9,10 |
| | புனித அன்னாள் அருள்சகோதரிகள் | 11, 12 |
| | பலிபீட சிறார்கள் | 13, 14 |
| 19.03.21 | புனித மோட்சராக்கினி மாதா அன்பியம் | 1, 2 |
| | புனித பர்னபா அன்பியம் | 3, 4 |
| | புனித அமலோற்பவ மாதா அன்பியம் | 5, 6 |
| | புனித செல்வநாயகி மாதா அன்பியம் | 7, 8 |
| | புனித மரியன்னை அன்பியம் | 9, 10 |
| | புனித பிலோமினாள் அருள்சகோதரிகள் | 11, 12 |
| | மறைக்கல்வி மாணாக்கர், ஆசிரியர்கள் | 13, 14 |
| 26.03.21 | புனித ஜெஸ்டின் அன்பியம் | 1, 2 |
| | புனித அந்தோணியார் அன்பியம் (கூனிபஜார்) | 3, 4 |
| | புனித மலைமாதா அன்பியம் | 5,6 |
| | புனித செபஸ்தியார் அன்பியம் (கூனிபஜார்) | 7, 8 |
| | புனித சவேரியார் அன்பியம் | 9, 10 |
| | புனித தாமஸ் அருள்சகோதரிகள் | 11, 12 |
| | இளையோர் இயக்கம் | 13, 14 |
| 02.04.21 | பங்குப்பேரவை | 1-14 |


# ஒரு வார்த்தை திருச்சிலுவைப்பாதை தியானம்



1. தீர்ப்பிடப்படு



2. சுமந்திடு



3. விழுந்திடு



4. ஊக்கப்படுத்திடு



5. உதவிடு



6. துடைத்திடு



7. எழுந்திடு



8. ஆறுதலளித்திடு



9. தொடர்ந்திடு



10. இழந்திடு



11. காயப்படு



12. இறந்திடு



13. தாங்கிடு



14. விதைத்திடு

# புனித லூர்து அன்னை

இயேசுவின் தாயான அன்னை மரியா, பல்வேறு இடங்களில் காட்சிக் கொடுத்ததாகக் கூறப்பட்டாலும் எல்லா காட்சிகளையும் திரு அவை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கவில்லை. ஆனால், லூர்து நகரில் மரியன்னைக் காட்சியளித்ததை திரு அவை ஐயத்திற்கு இடமின்றி அங்கீகரித்துள்ளது. மேலும், பிப்ரவரி 11–ஆம் நாள் லூர்தன்னையின் பெருவிழாவைத் திரு அவைக் கொண்டாடி மகிழ்கிறது.

பிரான்சு நாட்டில் லூர்து நகருக்கு அருகிலுள்ள ‘மசபியெல்’ என்ற கெபியில், பெர்னதெத் சுபிரு என்ற பதினான்கு வயது சிறுமிக்கு மரியா காட்சிக் கொடுத்தார். இக்காட்சிகள், 1858ஆம் ஆண்டு 11–ஆம் நாளிலிருந்து ஜூலை 16–ஆம் நாள் வரை 18 முறை நிகழ்ந்தன.

அப்போது மரியா வெண்ணிற ஆடை அணிந்திருந்தார். அவருடைய இடையில் நீலநிறக் கச்சையைக் கட்டியிருந்தார். அவருடைய பாதங்கள் ஒவ்வொன்றின்மீதும் மஞ்சள் நிறத்தில் ஒரு ரோஜா மலர் இருந்தது. அவருடைய கையிலிருந்த செபமாலையும் மஞ்சள் நிறத்தில் இருந்தது. பெர்னதெத் செபமாலை செபித்து முடித்ததும் மரியா மறைந்துவிட்டார். மூன்றாம் முறை பெர்னதெத்துக்குக் காட்சியளித்தபோது, அந்த இடத்தில் ஓர் ஆலயம் எழுப்பும்படி அவர் கூறினார். மேலும், புதுமையாகத் தோன்றிய ஊற்றுத் தண்ணீரைக் குடிக்கச் சொன்னார். பாவிகளின் மனமாற்றத்திற்காக மன்றாடும்படிக் கேட்டார்.

இறுதி முறையாக மரியா தோன்றியபோது, பெர்னதெத் அவர் யார் என்றுக் கேட்டபோது, தமது கைகளை விரித்து, வானத்தை அண்ணாந்துப் பார்த்து “நாமே அமல உற்பவம்” என்று தன்னை வெளிப்படுத்தினார். மரியா, பெர்னதெத்திடம் மீண்டும் மீண்டும் கூறிய வார்த்தைகள் தபம்… தபம்…தபம் என்பதே! ‘தபம்’ என்பது வெறுமனே ஏதோ ஒரு சொல் அல்ல. அது, ஆழமான தொடர் மனமாற்றத்தைக் குறிக்கின்றது. விண்ணிலிருந்து மண்ணகம் வந்த அன்னை மரி அன்று மட்டுமல்ல, இன்றும் நம்மிடம் இதைக் கேட்கின்றார்.

லூர்துநகரில் மரியா எப்போதும் தம் கைகளில் செபமாலையுடன் காட்சித் தந்தார். பெர்னதெத் செபமாலை சொன்னபோது, லூர்து அன்னை செபமாலையின் மணிகளை நகர்த்தினார். ஆனால், அவர் உதடுகள்

அசையவில்லை. பெர்னதெத் செபமாலையை செபித்து முடித்ததும் அவர் மறைந்து விட்டார். லூர்தன்னை செபமாலை செபிக்கும் பக்தி முயற்சியை ஊக்குவிக்கின்றார். செபமாலை செபிக்கும்போது நமது விசுவாசத்தை அறிக்கையிடுகின்றோம். மரியாவுடன் இணைந்து நம் மீட்பின் மறை நிகழ்ச்சிகளான இயேசுவின் பிறப்பு, வாழ்வு, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம் அனைத்தையும் தியானிக்கின்றோம்.

மரியா காட்சித் தந்த லூர்து நகர், புதுமைகளின் இருப்பிடம் எனக் கூறலாம். தினம் தினம் உலகின் எத்திக்குகளிலிருந்தும் ஏராளமான மக்கள் இங்கு வந்து கொண்டே இருக்கின்றனர்; உடலிலும் மனதிலும் அற்புதமாக நலம்பெற்று நம்பிக்கையோடு செல்கின்றனர்.

சக்கர நாற்காலிகளிலும் படுக்கைகளிலும் தன்னார்வத் தொண்டர்கள் நோயாளிகளை, அன்னைக் காட்சித் தந்த கெபியின் முன்பு நடைபெறும் திருப்பலி நேரத்திலும், மாலையில் நடைபெறும் நற்கருணை ஆசீரின் போதும் கொண்டு வருகின்றனர். பின் அருகிலுள்ள புதுமை நீருள்ள தொட்டிகளில் மூழ்கி எழுகின்றனர். இவ்வேளைகளிலெல்லாம் பல அற்புதங்கள் நிகழ்கின்றன.

ஒரு நிகழ்வு ‘புதுமை’ என்பதை இங்குள்ள மருத்துவ நிபுணர்கள் குழு பல ஆண்டுகள் ஆய்வுக்குட்படுத்தியே திரு அவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றனர். பின்னரே, திருத்தந்தை அதனைப் ‘புதுமை’ என அறிவிக்கிறார். லூர்து நகரிலுள்ள காட்சியகத்தில் பலருடைய சாட்சியங்கள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

லூர்து நகரில் மரியன்னைக் காட்சித் தந்த மசபியெல் குகை மிகமிக அமைதியான இடம். அங்கு எரிந்து கொண்டிருக்கும் மெழுகுதிரிகளைத் தவிர எந்தவித அலங்காரங்களையும் காண முடியாது. பெர்னதெத் தரையில் சுரண்டிய இடத்தில் தோன்றிய புதுமை நீரூற்றில் இன்னும் நீர் வந்து கொண்டிருக்கிறது. மரியா காட்சித்தந்த மலையின்மீது மூன்று ஆலயங்கள் கம்பீரமாக எழுந்து நிற்கின்றன.

லூர்தன்னை, மக்கள்மீதுக் கொண்ட அன்பிற்கு சாட்சியாகத் திகழ்கிறார். நாம் அவர்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாக செபமாலை சொல்வோம்; தபம் செய்வோம். இன்றைய உலகைப் புதுப்பிக்க இவை மிகமிகத் தேவை!

**திருமிகு. வி. லீமா ரோஸ்**

# யார் செழிப்பார்கள்?

## 1. ஆண்டவரை நம்புகிறவர், செழிப்பர்

- பேராசைக் கொண்டவன் சண்டை மூளச் செய்வான் : ஆண்டவரையே நம்பியிருப்பவர் நலமுடன் வாழ்வார். (நீதிமொழிகள் 28:25)

- ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர்; ஆண்டவரே அவர்களது நம்பிக்கை. அவர்கள் நீர் அருகில் நடப்பட்ட மரத்துக்கு ஒப்பாவர்; அது நீரோடையை நோக்கி வேர் விடுகின்றது. வெப்பமிகு நேரத்தில் அதற்கு அச்சமில்லை; அதன் இலைகள் பசுமையாய் இருக்கும்; வறட்சிமிகு ஆண்டிலும் அதற்குக கவலை இராது. அது எப்போதும் கனி கொடுக்கும். (எரேமியா 17:7-8)

## 2. நேர்மையாளர், செழிப்பர்

- நேர்மையாளர் பேரீச்சை மரமெனச் செழித்தோங்குவர்; லெபனோனின் கேதுரு மரமெனத் தழைத்து வளர்வர். (திருப்பாடல் 92:12)

- அவர் காலத்தில் நீதி தழைத்தோங்குவதாக; நிலா உள்ள வரையில் மிகுந்த சமாதானம் நிலவுவதாக... (திருப்பாடல் 72:7)

## 3. நடப்பட்டவர், செழிப்பர்

- ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோர் நம் கடவுளின் கோவில் முற்றங்களில் செழித்தோங்குவர். அவர்கள் முதிர் வயதிலும் கனிதருவர்; என்றும் செழுமையும் பசுமையுமாய் இருப்பர் (திருப்பாடல் 92:13-15)

## 4. குணமுள்ளவர், செழிப்பர்

- ஈகைக் குணமுள்ளோர் வளம்பட வாழ்வர். கடவுளை நம்பி வாழ்வோரோ தளிரெனத் தழைப்பர். நேர்மையான நடத்தை வாழ்வளிக்கும் மரத்திற்கு இட்டுச் செல்லும்; ஆனால், வன்செயல் உயிராற்றலை இழக்கச் செய்யும். நேர்மையாளர் இவ்வுலகிலேயே கைம்மாறு பெறுவர். (நீதிமொழி 11:24-31)

## 5. செம்மையானவர், செழிப்பர்


- பொல்லாரின் குடி வேரோடழியும்; நேர்மையாளரின் குடும்பம் தழைத்தோங்கும் (நீதிமொழி 14:11)

ஆண்டவரை நம்புகிறவர்களாக, நேர்மையாளர்களாக, ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டவர்களாக, ஈகைக் குணம் உள்ளவர்களாக வாழ்ந்தால், ஆண்டவரில் செழிப்புள்ளவர்களாக இருப்பது உறுதி.

திருமிகு. **ஜெயந்தி**

தவக்காலத்தின் 40 நாள்களும் இயேசுவோடு நடைபோட சில செயல்பாடுகள் மாதிரிக்கு வழங்கப்பட்டுள்ளன. நீங்களும் வேறு சிலவற்றை இணைத்து, செயல்படுத்திட இது உங்களுக்கு உதவட்டும்.

# இயேசுவோடு நடப்போம்



| 15 | 14 | 13 | 12 | 11 | | 10 | 9 |
|---|---|---|---|---|---|---|---|
| ஒருசந்தி சுத்த போசனம் | மின்சாரத்தை சிக்கனமாக செலவிடல் | ஒருவரையாவது மன்னித்தல் | சிறைக் கைதிகளுக்காக செபித்தல் | தண்ணீரை சிக்கனமாக செலவிடல் | **தவக்காலம் இரண்டாம் ஞாயிறு** | பாராட்டப் பழகுதல் | ஒருசந்தி சுத்த போசனம் |

**5** ஆலயத்தில் உதவுதல்

**6** நற்கருணை சந்திப்பு

**7** மனவல்லிய செபம் சொல்லுதல்

**8** குடும்பத்தில் சேர்ந்து ஒருவேளை உண்ணுதல்

**9** ஒருசந்தி சுத்த போசனம்

**10** பாராட்டப் பழகுதல்

**தவக்காலம் இரண்டாம் ஞாயிறு**

**11** தண்ணீரை சிக்கனமாக செலவிடல்

**12** சிறைக் கைதிகளுக்காக செபித்தல்

**13** ஒருவரையாவது மன்னித்தல்

**14** மின்சாரத்தை சிக்கனமாக செலவிடல்

**15** ஒருசந்தி சுத்த போசனம்

**16** விவசாயிகளுக்காக செபித்தல்

**தவக்காலம் மூன்றாம் ஞாயிறு**

**17** சிற்றுண்டிகள் தவிர்த்தல்

**18** தொலைக்காட்சி தவிர்த்தல்





**31** அலைபேசி விடுப்பு / தவிர்ப்பு

**32** குடும்ப செபம் செபிப்பது

**33** ஒருசந்தி சுத்த போசனம்

**34** மௌன விரதம் இருத்தல்


**குருத்து ஞாயிறு**

இரத்த தானம் செய்தல்



**35** விவிலியம் இல்லாத ஒருவருக்கு விவிலியம் தருதல்

**36** ஒப்புரவு அருள்சாதனம்



**திருநீற்றுப் புதன்** 1

ஒருசந்தி
சுத்த போசனம்

**2**
செபமாலை
செபித்தல்

**3**
ஒருசந்தி
சுத்த போசனம்

**4**
எல்லோருக்கும்
நன்றி சொல்லுதல்

**தவக்காலம் முதல் ஞாயிறு**

**19**
முதியோர் இல்லம்
சந்தித்தல்

தவிர்த்தல்

**20**
விவிலியம் வாசித்தல்

**21**
ஒருசந்தி
சுத்தபோசனம்

**22**
உலக அமைதிக்காக
செபித்தல்

**தவக்காலம் நான்காம் ஞாயிறு**

**23**
மன்னிப்பு கேட்டல்

**24**
மரக்கன்று நடுதல்

**25**
பொறுமையை
கடைபிடித்தல்

**26**
பொது மக்கள்
போக்குவரத்தை
பயன்படுத்துதல்

**27**
ஒருசந்தி
சுத்த போசனம்


**28**
குடும்பத்தில்
உதவுதல்


**தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு**

**29**
பறவைகளுக்கு
உணவு, நீர்
வைத்தல்

**30**
எளிமையாய்
இருத்தல்

தவிர்ப்பு


**நோன்பு**



**தர்மம்**


**37**
ஏழைக்கு ஒரு
வேளை
உணவளித்தல்


அருள்சாதனம்
பெறுதல்

**38**

**புனித வியாழன்**
குருக்களுக்காக
செபித்தல்

**39**
ஒருசந்தி
சுத்த போசனம்
**புனித வெள்ளி**


**40**
மரித்த
ஆன்மாக்களுக்காக
செபித்தல்
**புனித சனி**


**உயிர்ப்பு ஞாயிறு**




# திருவழிபாட்டு நாள்காட்டி

| நாள் | கிழமை | புனிதர்களின் நினைவு | முதல் & இரண்டாம் வாசகங்கள் | நற்செய்தி வாசகம் |
|---|---|---|---|---|
| 1. | திங்கள் | பொதுக்காலத்தின் 4ஆம் வாரம் | எபி. 11:32-40 | மாற்கு 5:1-20 |
| 2. | செவ்வாய் | இயேசுவை காணிக்கையாக அர்ப்பணித்த விழா | மலா. 3:1-4<br>எபி. 2 : 14-18 | லூக் 2:22-40 |
| 3. | புதன் | புனித ப்ளேஸ், புனித ஆன்ஸ்கார் | எபி. 12:4-7, 11-15 | மாற்கு 6:1-6 |
| 4. | வியாழன் | புனித ஜான் தெ பிரிட்டோ | 1 கொரி 9 : 19-29 | யோவா 12:20-32 |
| 5. | வெள்ளி | புனித ஆகத்தா | எபி. 13:1-8 | மாற்கு 6:14-29 |
| 6. | சனி | புனித பால் மீக்கி | எபி. 13:15-17, 20-21 | மாற்கு 6:30-34 |
| 7. | ஞாயிறு | பொதுக்காலத்தின் 5ஆம் ஞாயிறு | யோபு. 7:1-4, 6-7<br>1 கொரி 9 : 16-19, 22-23 | மாற்கு 1:29-39 |
| 8. | திங்கள் | புனித ஜெரோம் எமிலியானி | தொ.நூ. 1 :1-19 | மாற்கு 6:53-56 |
| 9. | செவ்வாய் | | தொ.நூ. 1:20-2:4a | மாற்கு 7:1-13 |
| 10. | புதன் | புனித ஸ்கொலாஸ்திக்கா | தொ.நூ. 2:4b-9, 15-17<br>திபா. 104: 1-2a. 27-28. 29bc-30 | மாற்கு 7:14-23 |
| 11. | வியாழன் | லூர்து நகர்ப் புனித கன்னி மரியா | தொ.நூ. 2 : 18-25 | மாற்கு 7:24-30 |
| 12. | வெள்ளி | | தொ.நூ. 3:1-8 | மாற்கு 7:31-37 |
| 13. | சனி | | தொ.நூ. 3:9-24 | மாற்கு 8:1-10 |
| 14. | ஞாயிறு | பொதுக்காலத்தின் 6ஆம் ஞாயிறு | லேவி. 13 :1-2, 44-46<br>1 கொரி 10:31-11:1 | மாற்கு 1:40-45 |
| 15. | திங்கள் | | தொ.நூ. 4:1-15, 25 | மாற்கு 8:11-13 |
| 16. | செவ்வாய் | | தொ.நூ. 6:5-8; 7:1-5,10<br>திபா. 29:1a,2. 3ac-4. 3b, 9b, 10 | மாற்கு 8:14-21 |
| 17. | புதன் | திருநீற்றுப்புதன் (தவக்காலம்) | யோவே. 2:12-18<br>2 கொரி 5:20-6:2 | மத். 6:1-6, 16-18 |
| 18. | வியாழன் | புனித குரியாக்கோஸ் | இச. 30:15-20 | லூக்.9:22-25 |
| 19. | வெள்ளி | | எசா. 58:1-9a | மத். 9 : 14-15 |
| 20. | சனி | | எசா. 58:9b-14 | லூக். 5:27-32 |
| 21. | ஞாயிறு | தவக்காலத்தின் முதல் ஞாயிறு | தொ.நூ. 9:8-15<br>1 பேதுரு 3:18-22 | மாற்கு 1:12-15 |
| 22. | திங்கள் | புனித பேதுருவின் தலைமைப்பீடம் விழா | 1 பேதுரு 5:1-4 | மாற்கு 16:13-19 |
| 23. | செவ்வாய் | புனித போலிக்கார்ப்பு | எசா. 55:10-11 | மத். 6:7-15 |
| 24. | புதன் | | யோனா 3:1-10 | லூக். 11:29-32 |
| 25. | வியாழன் | | எஸ். 4:17k-m, r-t | மத். 7:7-12 |
| 26. | வெள்ளி | தவக்காலத்தின் முதல் வாரம் | எசே. 18:21-28 | மத். 5:20-26 |
| 27. | சனி | | இச. 26:16-19 | மத். 5:43-48 |
| 28. | ஞாயிறு | தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு | தொ.நூ. 22:1-2, 9-13, 15-18<br>உரோ. 8 : 31-34 | மாற்கு 9:2-10 |

# அன்பிய வழிகாட்டி

1. **தூய ஆவியார் பாடல்** : இறைபிரசன்னத்தை உணர்தல், தூய ஆவியானவரின் பாடலைப் பாடவும். இறைவார்த்தையை சொல்லி ஆண்டவரை ஆராதனை செய்யலாம்.

2. **தொடக்க செபம்** :

3. **வரவேற்றல்** :அன்பிய கூட்டத்திற்கு பங்கேற்க வருபவர்களை அன்பிய இல்லத்தார் மலர்ந்த முகத்துடன் வரவேற்றல்.

4. **அன்பிய இறைவேண்டல்** (10 மணி செபம்) : விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே... செபத்துடன் ஆரம்பித்து ஒவ்வொரு மணியிலும் நமது கருத்துக்களுக்காக ஒப்புக் கொடுத்து செபித்து, அருள் நிறைந்த மரியே வாழ்க செபம் சொல்லவும்.

5. **கடந்த கூட்ட அறிக்கை** : கடந்த மாதம் நடைபெற்ற கூட்ட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய அறிக்கையை வாசித்தல்.

6. **இறைவார்த்தை வாசித்தல்** : நற்செய்தி வாசகம் - மத்தேயு 4:1-11 (இரண்டு அல்லது மூன்று பேர் ஒவ்வொருவராக வாசிக்கலாம்).

7. **இறைவார்த்தையை பகிர்தல்** : வாசிக்கப்பட்ட நற்செய்தியிலிருந்து நமக்குத் தேவையான சிந்தனைகளை பகிர்ந்து கொள்ளுதல்.

- சோதிப்பவன் நம் மீது அக்கறை உள்ளவனாகவே தன்னைக் காட்டிக் கொள்வான். இயேசு நோன்பிருந்து பசியாய் இருப்பதைப் பார்த்து கற்களை அப்பமாக மாற்றி உண்ணும்படி சாத்தான் சொல்கிறது, ஆடு நனைவதைப் பார்த்து ஓநாய் அழுவது போல.
- இறைவனுக்கு எதிராக நம்மைச் சிந்திக்க மற்றும் செயல்படத் தூண்டும் அனைத்துமே சாத்தானின் வடிவங்கள்.
- இயேசுவை சோதிக்க சாத்தான் விவிலிய வார்த்தைகளை பயன்படுத்துகிறான். விவிலியத்தை வைத்து சோதிக்கவும் முடியும். சோதனைகளை முறியடிக்கவும் முடியும். எனவே இறைவேண்டல், நோன்பு இவ்விரண்டையும் ஆயுதங்களாகக் கொண்டு சோதிக்கும் சாத்தானை விரட்டியடிப்போம்.

8. **பரிந்துரை மன்றாட்டுகள்** :

- போராடும் விவசாயிகளுக்காக
- வயத முதிர்ந்தோர், உடல், உள்ள நோய் உள்ளவர்களிடம் அன்பும் பரிவும் காட்ட
- வறுமையில் வாடுவோர், ஆதரவற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட
- தேர்வு எழுதும் மாணவ, மாணவியர் அதிக மதிப்பெண் பெற்று வெற்றியை எட்ட

(இறுதியாக விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே என்ற செபம் சொல்லவும்)

9. **செய்திகள் பகிர்வு** : திரு அவை செய்திகள், பங்கு நிகழ்வுகள், அன்பிய நிகழ்வுகள்

10. **வாழ்த்து கூறுதல்** : அன்பியக் குடும்பங்களில் இந்த மாதம் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளை கொண்டாடுபவர்களுக்கு வாழ்த்துகளை பரிமாறுதல்.

11. **நன்றி கூறுதல்** : கூட்டத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் நன்றிகளை தெரிவித்தல்.

12. **மரியன்னைக்கு புகழ் பாடல்**

# தாய்மொழி தினம் – பிப்ரவரி 21

**அவரவர் தாய்மொழி அவரவர்க்கழகு அதிலில்லை சந்தேகம்...!!**

ஒவ்வொரு மொழிக்கும் அந்த மொழிக்கே உரிய சிறப்புத் தன்மைகள் உண்டு. ஒவ்வொரு இனக் குழுவிற்கும் அடையாளமாக இருப்பது அவர்களின் தாய்மொழி. தாய்மொழிகளின் சிறப்பையும், அவசியத்தையும் எடுத்துணர்த்த, ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 21ம் நாள் உலக தாய்மொழிகள் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

மொழி நம் பண்பாட்டின் விழி. மொழியில்லாத வாழ்க்கை ஒளியில்லாத வாழ்க்கை. மூச்சைப் போல் மொழியும் முக்கியம். அறிதலுக்கும் தெரிதலுக்கும் புரிதலுக்கும் உணர்தலுக்கும் ஆராய்தலுக்கும் காரணமான உயிர் ஊடகம் மொழிதான். மனித இனத்தின் நாகரிகத்தின் அடையாளம் மொழி. பண்பாட்டின் அடையாளம் தாய்மொழி. தாயிடம் இருந்து கற்றும் மொழி தாய்மொழி. தாயாக நம்மைக் காக்கும் மொழி தாய்மொழி. தமிழ்க்குடியின் நீண்ட வரலாறும் அதன் தொன்மையும் தொடர்ச்சியும் நம் தாய்மொழியில்தான் பொதிந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக நாம் பேசும் மொழி தான் நமக்கு அடையாளம் என்று கூறும் பொழுது நமக்கு அடையாளமாக விளங்கும் நம் தாய்மொழியாம் தமிழ் மொழி தான் நம் நினைவிற்கு வருகிறது. ‘5000 ஆண்டுகள் பழமை உடைய ஹராப்பா, மொகஞ்சதாரோ புதை பொருட்களில் இடம்பெற்றுள்ள உருவ எழுத்துகள் தமிழ் எழுத்துகளே’ என அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழ் எழுத்துமொழி மூவாயிரம் ஆண்டுகள் பழமையானது எனக்கொண்டால், தமிழ்ப் பேச்சுமொழியோ ஐயாயிரம் ஆண்டுகள் பழமையானது என்று புரிந்து கொள்ளலாம். திராவிட மொழிக்குடும்பத்தின் தாயாகத் திகழ்வது தமிழ் மொழி தான் என்றும், தமிழ் மொழியில் இருந்துதான் திராவிட மொழிகள் தோன்றின எனவும் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறாக இவ்வளவு சிறப்பினைக் கொண்டுள்ள நம் தாய்மொழி தமிழ் மொழி என்று நினைக்கும் பொழுது மிகவும் பெருமையாக உள்ளது. இவ்வளவு பெருமையையும் சிறப்பினையும் கொண்டுள்ளது தமிழ் மொழியினை தாய்மொழிகளின் தினமான பிப்ரவரி 21 அன்று நினைத்து பார்ப்போம். தமிழ் மொழியினை தாய்மொழியாக கொண்டுள்ள நாம் அனைவரும் அன்றைய தினத்தில் நம் தாய்மொழியைப் போற்றி புகழ்வோம். தமிழ் மொழியினை மேலும் வளர்ப்பதற்கான முயற்சிகளை எடுப்போம். தமிழ்மொழி என்றும் வாழவும் வளரவும் வழி வகை செய்வோம்.

**தாய் மொழியினை போற்றும் அனைவருக்கும்**
**உலக தாய்மொழி தின நல்வாழ்த்துகள்**

செல்வன். D. சாம்சன்

# செபத்தை கேட்கிறவர்

திருப்பாடல் 65:2ல் மன்றாட்டுகளைக் கேட்கிறவர் என்று தாவீது சொல்கிறார். அதன்படியே குழந்தை இல்லாத அன்னாள் செபித்தபோது ஆண்டவர் அவள் செபத்தைக்கேட்டு சாமுவேல் என்ற மகனைக் கொடுத்தார். எப்பிராயீம் மலைத் தேசத்தில் உள்ள ராமதாயீம் என்ற ஊரில் எல்க்கானாவும் அவருடைய இரண்டு மனைவிகளான அன்னாவும், பெனின்னாவும் வசித்து வந்தார்கள். திருமணமாகி பல ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனாலும் அன்னாளுக்கு பிள்ளைகளில்லை. அதனால் அவள் மனம் உடைந்து போனாள். தன்னைத் தானே வெறுக்கத்தக்கதான நிலைமை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அன்னாள் கடவுளைப் பணிந்து கொண்டு பலி செலுத்துவதற்காக தன் குடும்பத்தோடு ஒவ்வொரு வருடமும் சீலோவிலுள்ள ஆலயத்திற்கு சென்றாள். கடவுள் தனக்கு குழந்தை தரவில்லை. அதனால் நான் போக மாட்டேன் என்று நினைக்கவில்லை. கணவனிடம் மறுப்பு தெரிவிக்கவில்லை, ஆலயத்திற்கு சென்றாள்.

ஆண்டவர் அன்னாளின் கர்ப்பத்தை அடைத்திருந்தார் என்று 1 சாமுவேல் 1:5 கூறுகிறது. அன்னாளின் கர்ப்பம் தற்காலிகமாக அடைக்கப்பட்டிருந்தது. தனக்கு குழந்தை இல்லை என்ற குறையை யாரிடம் சொல்லி அழுதாலும் தனக்கு ஆறுதல் கிடைக்கபோவது இல்லை என்பதை உணர்ந்திருந்தாள். தன் கணவனும் இந்த பிரச்சனையை தீர்க்க முடியாது என்று உணர்ந்து ஆலயத்திற்கு சென்று மனம் கசந்து அழுது புலம்பி தொடர்ந்து மன்றாடினாள். (1 சாமுவேல் 1:10) பொருத்தனையோடு மன்றாடினாள். ஆண்டவரே நீர் என்னை நினைவு கூற வேண்டும், என் குடும்பத்தை நினைவு கூற வேண்டும் என மன்றாடினாள். அப்படியே ஆண்டவரும் நினைவு கூர்ந்தார். (1 சாமுவேல் 1:19) சாமுவேல் என்ற மகனை கொடுத்தார்.

அன்னாள் பிள்ளை கிடைத்தவுடன் ஆண்டவரைத் துதித்துபாடி (1 சாமுவேல் 2:1-10) பிள்ளையை கடவுளுடைய பணிக்காக ஏலியிடம் ஒப்படைக்கிறாள். தன் பொருத்தனையை நிறைவேற்றுகிறாள். கடவுள் நம் குறைகளை சீக்கிரமாய் நிறைவேற்றுவார் (பிலிப்பியர் 4:19). அன்னாள் குழந்தை இல்லாத குறையை செபித்து பெற்றுக் கொண்டாள். நம் வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு குறைகளையும் நிவர்த்தி செய்கின்றவர் அவரே. நாமும் நம் குறைகளை அன்னாளைப் போல ஆண்டவரிடம் சொல்வோம். கடவுள் நமக்கு உதவி செய்வார். ஆமென்.

திருமதி. ஹேமா ஸ்டீபன்

# திரு அவை செய்திகள்

✿ புகலிடம் தேடி வந்தோரை வெளியேற்றுவதற்கு கடந்த அரசு விதித்த அரசாணைகளை, புதிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உடனடியாக நிறுத்தியிருப்பது குறித்து அமெரிக்க ஆயர்கள் பாராட்டு தெரிவித்து உள்ளனர்.

✿ உலக இளையோர் நாள் நிகழ்வுகளின் விருதுவாக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள "மரியா புறப்பட்டு... விரைந்து சென்றார்" (லூக் 1:39) என்ற சொற்களில் பொதிந்திருக்கும் அவசரம், வேகம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு "காற்றில் ஒரு வேகம் தெரிகிறது. இயேசு வாழ்கிறார், அவர் நம்மை தனியே விடுவதில்லை" என்ற பாடல் உருவாக்கப்பட்டுள்ளது. 2022ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட உலக இளையோர் நாள் நிகழ்வுகள், கோவிட் -19 பெருந்தொற்று காரணமாக, 2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.

✿ பிளவுபட்டுள்ள இன்றைய உலகில், ஒன்றிப்புச் செய்தியை வழங்கும் விதமாக, ஜெர்மன் கிறிஸ்தவ சபைகள், 2021ம் ஆண்டை, "என் அன்பில் நிலைத்திருங்கள் மற்றும், நீங்கள் மிகுந்த கனி தருவீர்கள்" (யோவா 15:5-9) என்ற மையக்கருத்துடன், தேசிய அளவில் கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆண்டாகச் சிறப்பித்து வருகின்றன.

✿ ஈராக் நாட்டின் தலைநகர் பாக்தாத்தில், சனவரி 21 அன்று அடுத்தடுத்து நடந்த, இரண்டு தற்கொலை வெடிகுண்டு தாக்குதல்களுக்கு, உலக அளவில், அரசியல் மற்றும் சமயத் தலைவர்கள், தங்களின் வன்மையான கண்டனங்களை வெளியிட்டுள்ள வேளை, அந்நாட்டில், சட்டங்களை மதித்தல், குடிமக்கள் கலாச்சாரத்தைப் பேணுதல், பன்மைத்தன்மை, சகிப்புத்தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒப்புரவுக்கு கர்தினால் சாக்கோ அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

✿ அர்ப்பண வாழ்வை மேற்கொண்டுள்ள துறவியருக்கு அதற்கான பேராயத்தினால் அனுப்பப்பட்டுள்ள மடலில், துறவு வாழ்வு, நன்றியின் கனிகளை எப்போதும் தாங்கியிருக்க வேண்டும் என்ற அழைப்பு விடப்பட்டுள்ளது. மேலும் உலக மக்கள் அனைவரும் உடன்பிறந்தோர் என்ற உணர்வை வளர்ப்பதில், துறவியர் ஆற்றும் பணிகள் முக்கியமானவை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இறைவாக்குத் தேடல்

(விவிலியப் பகுதி : தொடக்க நூல் 21-50 அதிகாரங்கள்)

குறிப்பு :

- பதிலைத் தனித்தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் கொடுக்கவும், பெயர் அன்பியம், முகவரி குறிப்பிடவும், அதிகாரம் மற்றும் வசனம் குறிப்பிடவும்.
- பேராலய ஒலி இதழில் இருந்து கேட்கப்படும் கேள்விகளுக்குத் தலைப்பு மற்றும் பக்கம் குறிப்பிட்டு எழுத வேண்டும்.
- குடும்பத்திற்கு ஒருவர் மட்டுமே பங்கேற்க வேண்டும்.
- **சரியான விடை எழுதியவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதத்தின் முதல் ஞாயிறு காலை 8.30 மணித் திருப்பலியில் சிறப்பிக்கப்படுவார்கள்.**

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் :**
**பிரதி மாதம் 22ம் தேதிக்குள்**

## I. நிரப்புக

1. நீர் கேட்கிற நிலம் ............ வெள்ளிக் காசுகள்தான் பெறும்.
2. ரெபேக்காவோ .............. மீது அன்பு கொண்டிருந்தார்.
3. இதோ ............. அப்பக் கூடைகள் என் தலையில் இருந்தன.
4. எகிப்து நாட்டில் யோசேப்பிற்கு பிறந்த புதல்வர்களோ ..............
5. யூதாவைவிட்டுச் ................ நீங்காது.

## II. யார் யாரிடம் கூறியது?

1. நீங்கள் கழுதையோடு இங்கேயே காத்திருங்கள்.
2. உன்னைச் சபிப்பார் சாபம் பெறுக! உன்னை வாழ்த்துவார் வளமுற வாழ்க!
3. யோசேப்பிடம் செல்லுங்கள்; அவர் சொல்வதைச் செய்யுங்கள்.
4. அவனுக்கு நானே பொறுப்பாளி. அவனைப் பற்றிய பொறுப்பை என் கையில் விட்டுவிடுங்கள்.
5. நான் சாகும் வேளை வந்துவிட்டது. ஆனால் கடவுள் உங்களைக் கனிவுடன் சந்திக்க உறுதியாக வருவார்.

## III. பொருத்துக.

1. பாரான் - யாக்கோபின் மகள்
2. லூசு - முந்நூறு வெள்ளிக்காசுகளும், ஐந்து ஆடைகளும்
3. தீனா - யோசேப்பின் தலை மகன்
4. மனாசே - பாலை நிலம்
5. பென்யமின் - பெத்தேல்

## IV. இதழில் தேடவும்

1. துறவியர் திரு அவைக்கு கடவுள் கொடுத்த .............
2. புனித லூர்தன்னையின் காட்சிகள் எத்தனை முறை நிகழ்ந்தன?
3. இயேசுவை சோதிக்க சாத்தான் ............... வார்த்தைகளைப் பயன்படுத்துகிறான்.
4. தமிழ்ப் பேச்சுமொழி ............... ஆண்டுகள் பழமையானது.
5. துறவு வாழ்வு .................... கனிகளை எப்போதும் தாங்கியிருக்க வேண்டும்.

---

# சென்ற இதழின் சரியான விடைகள்

**I.** 1. கடவுளின் ஆவி (தொநூ 1:2) 2. ஏழாம் (2:3) 3. பாம்பு (3:13) 4. பத்தாம் (8:5) 5. இஸ்மயேல் (16:15)

**II.** 1. ஆண்டவராகிய கடவுள் பாம்பிடம் சொன்னது (3:14), 2. ஆண்டவர் காயினிடம் சொன்னது (4:7), 3. ஆபிராம் லோத்திடம் சொன்னது (13:8), 4. ஆண்டவரின் தூதர் ஆகாரிடம் சொன்னது (16:11), 5. அபிமெலக்கு சாராவிடம் சொன்னது (20:16)

**III.** 1. இலாமேக்கின் மகன் (5:28), 2. கானானின் தந்தை (9:18)

3. கீல் குழிகள் (14:10), 4. எகிப்தியப் பணிப்பெண் (16:3)

5. அம்மோனியரின் தந்தை (19:38)

**IV.** 1. முத்தனம்பட்டி (பக். 2 டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்தவை), 2. திருத்தந்தை அருளாளர் 9ஆம் பயஸ் (பக். 4 புனித வளன் - முன்னுதாரணமான தந்தை), 3. அருள்பணி. ஸ்டான் சுவாமி (பக். 13 திரு அவை செய்திகள்), 4. மனத்தை (பக். 6 புத்தாண்டு வாக்குறுதி - உண்மையுள்ளவர்களாக வாழ்வோம்), 5. பாவம் (பக். 12 வெற்றியுடன் 2021)

## இறைவாக்குத் தேடல் போட்டியில் சரியான பதில் எழுதியவர்கள்

R. ஜெயசீலி - லூர்து அன்னைஅன்பியம், M.G. வின்ஸி கஸ்பார் - அந்தோணியார் அன்பியம், ச. குழந்தை தெரஸ், D. மரிய சாரதா - புனித ஜெஸ்டின் அன்பியம், L. ஞானஜோயல் - ஆரோக்கிய அன்னை அன்பியம், S. பவுலின் மேரி, ஆ. ஹார்ட்லின், X. நேவிஸ் சகாயமேரி - புனித மத்தேயு கபிரியேல் அன்பியம், ஜோ. சுபா கிறிஸ்டினாள் - புனித செல்வநாயகி அன்பியம், A. ஹில்டா ரோசாரியோ, A. பெர்னா லெத்திசியா - புனித அருளானந்தர் அன்பியம், ஜே. மெர்சி, பெ. சுமி பெனா - புனித சகாயமாதா அன்பியம், செ, ஹெபி இன்ஃபா, S. ரீத்தா டெய்ஸி பாப்பு, ஆஞ்சலா ராய் - புனித மோட்சராக்கினி மாதா அன்பியம், சே. ஆரோக்கிய ஜூலியட் - புனித மரியம் தெரசா அன்பியம், F. சாந்த ரூபி - புனித ஆசீர்வாதப்பர் அன்பியம், M. அன்னமேரி, M. அந்தோணியம்மாள் - புனித பர்னபா அன்பியம், S. எலிசபெத் ராணி - புனித செல்வநாயகி மாதா அன்பியம், J. ஜெனிஃபர் - புனித செபஸ்தியார் அன்பியம்,

**அனைவருக்கும் செபங்களும் வாழ்த்துகளும்**

---

## ஜனவரி மாதம் – 2021

### திருமுழுக்கு பெற்ற குழந்தைகள்

| | குழந்தையின் பெயர் | பெற்றோர் பெயர் |
|---|---|---|
| 1. | ஆர்லின் ஏன்ஜளா | அந்தோணிராஜ் - மேரி அனிட்டா |
| 2. | ஜாஸ்ரில் ரியுபன் | ஜோசப் பிரவின் குமார் - ஜெஸிந்தா மேரி |
| 3. | ஆர்லின் ஏஞ்சலினா | அந்தோணிராஜ் - மேரி அனிட்டா |
| 4. | ஆட்ரியான் பெனிட்டா பிரான்சிஸ் | மணிகண்டன் - கரோலின் கிறிஸ்டினா பிரான்சிஸ் |
| 5. | ஜீனா சாரா | ஏபி - மேடா |

---

## ஜனவரி மாதம் – 2021

### திருமணத்தில் இணைந்தவர்கள்

1. ஜோசப் பிரின்டோ - சகாய ஆர்த்தி, கெம்ஸ்டவுன்
2. ஆன்டனி பிரிலின் - லிபியா, கெம்ஸ்டவுன்
3. எர்னஸ்ட் பிரினஸ் - ஆனி பிரியா, பீமநகர்
4. தேவ சகாயம் - சூசை ஹெலினா மேரி, கெம்ஸ்டவுன்
5. ராபர்ட் ரெக்ஸ் - அபர்னா, கன்டோன்மெண்ட்
6. திவாகர் - டெல்பின், ஒத்தக்கடை
7. ஜாக்கின் - தீனா, பீமநகர்

# இம்மாத அன்பியக் கூட்டங்கள்

| தேதி | அன்பியம் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1.2.21 | புனித பிரான்சிஸ் சேவியர் | மரியநாதன் ரோத்ரா – கரோலின் மரியா, கெம்ஸ்டவுன் |
| 2.2.21 | புனித ஆரோக்கிய அன்னை | செபாஸ்டின் – குளோரி, மேலப்புதூர் |
| 3.2.21 | புனித மத்தேயு கபிரியேல் | போப் பிரான்சிஸ் கூடம் |
| 4.2.21 | புனித ஆசீர்வாதப்பர் | லிடியா, மேட்டுத்தெரு |
| 5.2.21 | புனித குழந்தையேசு | அருள்சாமி, வார்னர்ஸ் ரோடு |
| 6.2.21 | புனித சவேரியார் | சின்னப்பன் ஜோதிதுரை – குளோரியா, செங்குளம் |
| 8.2.21 | புனித பவுல் | கென்னடி – ஜெஸிந்தா அம்மு, வடக்கு எடத்தெரு |
| 8.2.21 | புனித மோட்ச ராக்கினி மாதா | புனித மோட்சராக்கினி மாதா ஆலயம், பூந்தோட்டம் |
| 9.2.21 | புனித அருளானந்தர் | ஆரோக்கியசாமி – அல்போன்சா சகாயமேரி, வில்லியம்ஸ் ரோடு |
| 10.2.21 | புனித சந்தியாகப்பர் | ராஜேந்திரன் – நான்சி, கெம்ஸ்டவுன் |
| 10.2.21 | புனித லூர்தன்னை | ஜெயசீலி – ராபர்ட், காவலர் குடியிருப்பு |
| 11.2.21 | புனித செபஸ்தியார் | புனித செபஸ்தியார் ஆலயம், கெம்ஸ்டவுன் |
| 12.2.21 | புனித மலைமாதா | போப் பிரான்சிஸ் கூடம், கொ. தெரு |
| 13.2.21 | புனித அந்தோணியார் | ஏசுதாஸ் – மேரி பெல்சியா, செங்குளம் |
| 13.2.21 | புனித மரியம் தெரசா | ஜேம்ஸ் தேவராஜ் – சகாயராணி, முதலியார் சத்திரம் |
| 15.2.21 | புனித பர்னபா | அமல்ராஜ் – டெல்மாரோஸ், ஆர்.சி. காம்பவுண்ட் |
| 16.2.21 | புனித ஜெஸ்டின் | இனிகோமேரி – சகாயராஜ், நேமத்தான்தெரு |
| 17.2.21 | சகாயமாதா | ஸ்டீபன் – செல்வி, இ.பி.கோவில் தெரு |
| 18.2.21 | புனித அந்தோணியார் | அந்தோணி செர்ஜீஸ் மேரி அலக்சியா, ம.பேட்டை |
| 19.2.21 | திருஇருதய ஆண்டவர் | சகாயராணி, கண்டித்தெரு |
| 20.2.21 | புனித செபஸ்தியார் | ஆல்பர்ட் ஜோசப் – கரோலினாள், செங்குளம் |
| 20.2.21 | புனித அடைக்கல மாதா | புனித அடைக்கல மாதா ஆலயம், கூனிபஜார் |
| 21.2.21 | புனித சிறுமலர் | யானைக்கட்டிமைதானம் |
| 22.2.21 | புனித செசிலியா | கான்வென்ட்ரோடு |
| 23.2.21 | புனித அமலோற்பவ மாதா | சகாயராஜ் – ஜெயராணி, காஜாப்பேட்டை |
| 24.2.21 | புனித மரியன்னை | ஜெயில்பேட்டை |
| 25.2.21 | புனித செல்வநாயகி மாதா | சேவியர் – டோரம்மாள், ஆலம்தெரு |
| 26.2.21 | புனித அன்னை தெரசா | ராபின் – நான்சி, ஒத்தக்கடை |
| 27.2.21 | புனித வளன் | ஸ்டீபன் சேவியர் – சகாயமேரி, கண்டித்தெரு, பீமநகர் |

# பொங்கல் விழா கொண்டாட்டம்














# அன்பியப் பொங்கல் விழா கொண்டாட்டம்



## அன்பியப் பொங்கல் விழா கொண்டாட்டம்











## மறைக்கல்வி மாணவர்கள்





## குடியரசு தின விழா கொண்டாட்டம்







